# <u>சிவகங்கை நகராட்சி</u>

## <u>அவசரக் கூட்டம்</u>

நிகழும் பிலவ வருடம் 2021ம் ஆண்டு டிசம்பர் மாதம் (13.12.2021) நாள் திங்கள் கிழமை கார்த்திகை மாதம் 27ம் நாள் மாலை 4.00 மணிக்கு தனி அலுவலர் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள்.

**தலைமை திரு.பு.ரா. பாலசுப்பரமணியம், எம்.ஏ,.**

**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்.**

**சிவகங்கை நகராட்சி.**

1. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.31113/2021 அம்ருட்-2 நாள்..16.12.2021ம் தேதியிட்ட கடிதத்தில், 15வது மானிய நிதிக்குழு (Tied Grant 2021-2022) திட்டத்தின் கீழ் ரூ.66.00 இலட்சம் மதிப்பீட்டில் மருதுபாண்டியர் நகர் பகுதியில் வள மீட்பு மையம் (Resource Recovery Centre) மற்றும் குடிநீர் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட பகுதியில் மேற்படி பணிகளை மேற்கொள்ள தொழில்நுட்ப அனுமதி வேண்டி ரூ.66.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களுக்கு விரிவான திட்டஅறிக்கையினை அனுப்பிவைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(Rs.in Lakhs)**

| Sl.No | Name of the Work | Estimate Amount | Grant Allocated |
|---|---|---|---|
| 1 | Providing 90mm PVC Distribution maing at Ward No:26 and 27 in Municipal town limit | 10.00 | 66.00 |
| 2 | Providing 160mm PVC Distribution main at college road to Indira nagar in Municipal town limit | 10.00 | |
| 3 | Providing 90mm PVC Distribution main at Ward No:15 Nelmandi Street and ward No:19 Sastri main steet | 4.00 | |
| 4 | Providing 110mm PVC Distribution main at Ward NO:19 Meenakshi nagar park to Madhavan Mahal back side and Ward No:23 in Kamarajar Street | 4.50 | |
| 5 | Providing 90mm PVC Distribution main at Ward NO:05 Ramachandra park to Theppakulam | 4.50 | |
| 6 | Construction of Resource Recovery Centre (RRC) at Maruthupandiar Nagar in Sivagangai Municipality | 33.00 | |
| | **Total** | **66.00** | |

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி திட்டப்பணியினை தமிழ்நாடு அரசின் முழு மான்யமாக பெற்று செயல்படுத்திட மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண்:** 687 - அனுமதிக்கப்பட்டது.

# <u>சிவகங்கை நகராட்சி</u>

# <u>அவசரக் கூட்டம்</u>

நிகழும் பிலவ வருடம் 2021ம் ஆண்டு டிசம்பர் மாதம் (16.12.2021) நாள் புதன் கிழமை மார்கழி மாதம் 01ம் நாள் மாலை 4.00 மணிக்கு தனி அலுவலர் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள்.

**தலைமை திரு.பு.ரா.பாலசுப்பரமணியம் எம்.ஏ,.**

**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்.**

**சிவகங்கைநகராட்சி**

1. தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பமின்னனு சேவை வழங்கல் விதிகள் 2016**(Tamil Nadu Information Technology, Electronic Service Delivery Rules 2016)**விதி 5, துணை விதி (1) ன் மூலம் திருவண்ணாமலை நகராட்சியின் கீழே குறிப்பிட்டுள்ள சேவைகள், அட்டவணையில் தெரிவித்துள்ளபடி மின்னனு சேவை விநியோக **(Electronic Service Delivery System)**அமைப்பின் கீழ்**https://tnurbanepay.tn.gov.in/**என்ற இணையதளம் வாயிலாக வழங்கப்படுகிறது.

| **வரிசை எண்** | **மின்னனு முறையில் வழங்கக்கூடிய பொது சேவைகளின் பெயர்** | | | **சேவையை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட அதிகாரி** |
|---|---|---|---|---|
| 1 | 2 | | | 3 |
| 1 | குடிநீர் கட்டணம்<br>Water Charge | i | புதிய குடிநீர் இணைப்பு<br>New Water Connection | நகராட்சி ஆணையாளர் |
| | | ii | புதிய குடிநீர்இணைப்புக்கான கட்டணம்<br>Payment for New Water Supply Connection | |
| 2 | தடையின்மை சான்றுக்கான விண்ணப்பம்<br>Apply for NOC/ Clearance | i | திரைப்பட படப்பிடிப்புக்கான விண்ணப்பம்<br>Application for movie shooting | |
| | | ii | குடிநீர்இணைப்புக்கான தடையின்மை சான்று (தொழிற்சாலை)<br>NOC for Water Connection (Industrial) | |
| | | iii | திரைப்பட படப்பிடிப்பு கட்டணம்<br>Movie Shooting Payment | |
| | | iv | திரைப்பட படப்பிடிப்புக்கு தடையின்மை சான்று<br>NOC for Movie Shooting | |
| | | v | தொழிற்சாலை பயன்பாடுபாதாளசாக்கடைஇணைப்புக்கானத டையின்மைசான்று<br>NOC for UGD Connection for Industrial | |
| 3 | சுகாதார சான்றிதழ்<br>Sanitary Certificate | i | சுகாதார சான்றிதழ்<br>Sanitation Certificate | |
| 4 | கட்டிட அனுமதி | i | கட்டிட அனுமதி பணிக்கான முன்னேற்றம் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | Building Plan Approval | | Building Plan Work Progress | |
| | | ii | கட்டிட அனுமதி இறுதி கட்ட பணிமுன்னேற்ற அறிக்கை<br>Building Plan Work Progress last story | |
| | | iii | வரி மதிப்பீட்டிற்கான நிறைவு அறிக்கை<br>Complete report for Tax Assessment | |
| | | iv | மனைப்பிரிவுஅங்கீகாரகட்டணம்<br>Layout Approval Payment | |
| | | v | மனைப்பிரிவுஅங்கீகாரம்கோருதல்<br>Layout Approval Request | |
| | | vi | வேலை தொடங்குவதற்கான அறிவிப்பு<br>Notice for Commencement Work | |
| | | vii | கட்டிடம் இடிக்க அனுமதி<br>Permission for Demolition for Building | |
| | | viii | கட்டிடஅனுமதிக்கான கட்டிட உரிமகட்டணம்<br>Planning Permission with Building License Payment | |
| | | ix | கட்டிடஅனுமதிக்கான கட்டிட உரிமம்<br>(12 மீட்டருக்குகீழ்)<br>Planning Permission with Building License (Below12 mts) | |
| | | x | கட்டிடஅனுமதிக்கான கட்டிட உரிமம்<br>(1200 சதுரஅடிக்குகீழ்)<br>Planning Permission with Building License (Below 1200 Sq.ft) | |
| | | xi | தொழில் வல்லுநர் / டெவலப்பர்களின் பதிவு<br>Registration of Professionals/Developers | |
| | | xii | தொழில் வல்லுநர்/டெவலப்பர்கள் சான்றிதழ் பதிவு<br>Registration of Professional/Developers Certificate | |
| | | xiii | கட்டிடவரைபடம்புதுப்பித்தல்கோரிக்கை<br>Renewal Building Plan Request | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | xiv | கட்டிடவரைபடம்புதுப்பித்தல்கட்டணம்<br>Renewal Building Plan Payment | |
| | | xv | தொழில் வல்லுநர்கள் /டெவலப்பரின் புதுப்பித்தல் பதிவு<br>Renewal Registration of Professional/Developer | |
| | | xvi | இயந்திர உரிமத்திற்கான கோரிக்கை<br>Request for machinery License | |
| 5 | வர்த்தக உரிமம்<br>Trade License | i | தொழில் உரிமம்பதிவு - தேடல்<br>Trade Registration – Search | |
| | | ii | தொழில் உரிமம்புதுப்பித்தல் - தேடல்<br>Trade Renewal - Search | |
| 6 | சொத்து வரி<br>Property Tax | i | வரிவிதிப்புமுழுவிவரம்<br>View Assessment History | |
| | | ii | வரிவிதிப்பு விவரம் காண<br>View Assessment | |
| 7 | தொழில்வரி<br>Professional Tax | i | புதிய தொழில்வரி விதிப்புக்கான கோரிக்கை<br>New Assessment request | |
| | | ii | தொழில்வரிவிதிப்புக்கான கோரிக்கைமீள சமர்ப்பிப்பு<br>Return Submission | |
| 8 | பிறப்பு மற்றும் இறப்பு<br>Birth & Death | i | எனது சான்றிதழ்<br>My Certificate | |
| 9 | சாலை துண்டிப்பு<br>Road Cutting | i | சாலை துண்டிப்பு அனுமதி<br>Road Cutting Permission | |
| | | ii | சாலை துண்டிப்பு கட்டணம்<br>Road Cutting Payment | |

**(ந.க.எண் : 2792/C1/2021)**

**நகர்மன்றத் தீர்மான எண்: 688.** அனுமதிக்கப்பட்டது.

# <u>சிவகங்கை நகராட்சி</u>

## <u>சிறப்புக் கூட்டம்</u>

நிகழும் பிலவ வருடம் 2021ம் ஆண்டு டிசம்பர் மாதம் (23.12.2021) நாள் வியாழன் கிழமை மார்கழி மாதம் 08ம் நாள் காலை 11.00 மணிக்கு தனி அலுவலர் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள்.

**தலைமை திரு.பு.ரா.பாலசுப்பரமணியம் எம்.ஏ,.**

**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்.**

**சிவகங்கைநகராட்சி**

1. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்..32454/2021/அம்ருட்-2. நாள்..17.12.2021 ம் தேதியிட்ட கடிதத்தில், 15 வது மானிய நிதிக்குழு (National Health Mission) 2021-22 திட்டத்தின் கீழ் ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் உழவர் சந்தை அருகில் நகர்ப்புற சுகாதார மற்றும் ஆரோக்கிய மையம் அமைக்கும் பணிக்கு (Urban Health and Wellness Centre) நிதி ஒதுக்கீடு செய்து வரப்பெற்றுள்ளது. மேற்படி திட்டப்பணியினை 15 வது மானிய நிதிக்குழு 2021-22ன் கீழ் மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| Sl.no | Name of the Work | Estimate Amount (RS.in Lakhs | Grant Allocated |
|---|---|---|---|
| 1. | Construction of Urban Health and Welness Centre (U-HWCs) Near Ulavar Sandai in Sivagangai Municipality | 25.00 | 25.00 |
| | **Total** | **25.00** | |

**அலுவலக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி திட்டப்பணியினை தமிழ்நாடு அரசின் முழு மான்யமாக பெற்று செயல்படுத்திட மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்..1084/2021/இ1)

**நகர்மன்றத் தீர்மான எண்:** 689 அனுமதிக்கப்பட்டது.

**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்,**

**சிவகங்கை நகராட்சி.**

# <u>சிவகங்கை நகராட்சி</u>

## <u>சாதாரண கூட்டம்</u>

நிகழும் பிலவ வருடம் 2021ம் ஆண்டு டிசம்பர் மாதம் (31.12.2021) நாள் வெள்ளி கிழமை மார்கழி மாதம் 16ம் நாள் மாலை 4.00 மணிக்கு தனி அலுவலர் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள்.

**தலைமை திரு.பு.ரா.பாலசுப்பரமணியம், எம்.ஏ,.**

**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்.**

**சிவகங்கைநகராட்சி**

1. சிவகங்கை நகராட்சி அலுவலகத்தில் ஆணையாளர் அவர்கள் பயன்படுத்தும் TN 63 J9787 எண்ணுள்ள ஈப்பு வாகனத்தில் மைக்செட் பொருத்தும் பணிக்கு 15.11.2021 அன்று உள்ளூர் விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | திரு.M.கண்ணன், சிவகங்கை | ரூ.24,600/- |
| 2. | திரு.P.முருகன், சிவகங்கை | ரூ.26,000/- |
| 3. | திரு.B.முருகன், சிவகங்கை | ரூ.27,000/- |

**அலுவலகக்குறிப்பு:**

1. மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று உள்ளூர் விலைப்புள்ளியில் குறைவான விலை விகிதம் வழங்கிய திரு.M.கண்ணன் என்பவரது விலைப்புள்ளியை ஏற்கலாம்.
2. மேற்படி பணியானது கொரோனா மற்றும் தேர்தல் தொடர்பான பணியென்பதால் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்ற மேற்படி ஒப்பந்ததாரருக்கு வேலை உத்தரவு வழங்கியதை ஏற்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண்**: 690. அனுமதிக்கப்பட்டது.

2. சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 61.75 கி.மீ நீளத்திற்கு பகிர்மான குழாய்களும் இடைக்காட்டூர் தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து சிவகங்கை நகராட்சி வரை மொத்தம் 22 கி,மீ நீளத்திற்கு 300 மி.மீ சி ஐ மற்றும் 300 மி.மீ டி ஐ ஆகிய இரண்டு பிரதான குழாய்களும் பதிக்கப்பட்டு பராமரித்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது இவைகளில் அவ்வப்போது ஏற்படும் கசிவுகள் மற்றும் உடைப்புகளை சரி செய்து கொடுக்க 26.02.2021 அனுமதி வழங்கியுள்ளது அதன்படி ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு,பி முருகன் ஒப்பந்தார்ர் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது, மேற்படி பணிகளை மேற்கொள்வதற்கான பணிகாலம் டிசம்பர் 2021 தேதியுடன் முடிவடைகிறது தற்போது OutSourcing மூலம் பணியாளர்களை நியமித்து பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு திட்டப் பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது குடிநீர் விநியோக மோட்டார் பம்பு செட் பழுது ஏற்பம் பட்சத்தில் பணிகளை மேற்கொள்ள இயலவில்லை அதனால் பொதுமக்களுக்கு சீரான குடிநீர் வழங்க இயலவில்லை எனவே நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களிடம் இருந்து அனுமதி வரும் வரை ஓப்பந்தார்ர் ஏற்கனவே கொடுத்துள்ள விலை விகிதத்திற்கு மார்ச் 2022 முடிய மூன்று மாத காலத்திற்கு மட்டுமே நீட்டிப்பு செய்து கொண்டு பணியினை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக் குறிப்பு** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந,க,எண்,641/2020/இ2**

**நகர்மன்றத் தீர்மான எண்**: 691 அனுமதிக்கப்பட்டது.

3. சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட வார்டு 15 முதல் 27 வரை உள்ள சின்டெக்ஸ் டேங்க் சிறுமின் விசை மோட்டர் பம்புசெட் மற்றும் இடைக்காட்டூர் தலைமை நீரேற்று நிலையத்தில் இயங்கி வரும் 5 குடிநீர் விநியோக மோட்டார் பம்பு செட்டுகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்து கொடுக்க ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.9.80 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மானம் எண் 349 நாள் 26.02.2021ல் அனுமதி வழங்கிய்யுள்ளது அதன்படி ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு,எம், நாட்டரசன் ஒப்பந்தார்ர் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது மேற்படி பணிகளை மேற்கொள்வதற்கான பணிகாலம் டிசம்பர் 2021 தேதியுடன் முடிவடைகிறது, தற்போது Out Sourcing மூலம் பணியாளர்களை நியமித்து பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு திட்டப் பேரரனை அனுப்ப்பட்டுள்ளது, நகராட்சி எல்லைக்குட்பட்ட சிறுமின்விசை மோட்டார் பம்பு செட் பழுது ஏற்படும் பட்சத்தில் பணிகளை மேற்கொள்ள இயலவில்லை அதனால் பொதுமக்களுக்கு சீரான குடிநீர் வழங்க இயலவில்லை எனவே நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களிடம் இருந்து அனுமதி வரும் வரை ஒப்பந்த்தார்ர் ஏற்கனவே கொடுத்துள்ள விலை விகித்த்திற்கு மார்ச் 2022 முடிய மூன்று மாத காலத்திற்கு மட்டும் நீட்டிப்பு செய்து கொண்டு பணியினை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது,

**அலுவலக்க்குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்

**ந.க.எண் 640/2020/இ2.**

**நகர்மன்றத் தீர்மான எண்**: 692 அனுமதிக்கப்பட்டது.

4. சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட வார்டு 1 முதல் 14 வரை உள்ள சின்டெக்ஸ் டேங்க் சிறுமின் விசை மோட்டர் பம்புசெட் மற்றும் இடைக்காட்டூர் தலைமை நீரேற்று நிலையத்தில் இயங்கி வரும் 5 குடிநீர் விநியோக மோட்டார் பம்பு செட்டுகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்து கொடுக்க ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.9.80 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மானம் எண் 343 நாள் 26.02.2021ல் அனுமதி வழங்கிய்யுள்ளது அதன்படி ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு,எம், நாட்டரசன் ஒப்பந்தார்ர் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது மேற்படி பணிகளை மேற்கொள்வதற்கான பணிகாலம் டிசம்பர் 2021 தேதியுடன் முடிவடைகிறது, தற்போது Out Sourcing மூலம் பணியாளர்களை நியமித்து பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு திட்டப் பேரரனை அனுப்ப்பட்டுள்ளது, நகராட்சி எல்லைக்குட்பட்ட சிறுமின்விசை மோட்டார் பம்பு செட் பழுது ஏற்படும் பட்சத்தில் பணிகளை மேற்கொள்ள இயலவில்லை அதனால் பொதுமக்களுக்கு சீரான குடிநீர் வழங்க இயலவில்லை எனவே நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களிடம் இருந்து அனுமதி வரும் வரை ஒப்பந்த்தார்ர் ஏற்கனவே கொடுத்துள்ள விலை விகித்த்திற்கு மார்ச் 2022 முடிய மூன்று மாத காலத்திற்கு மட்டும் நீட்டிப்பு செய்து கொண்டு பணியினை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது,

**அலுவலக்க்குறிப்பு** மன்றம் அனுமதி வழங்கலாம்

**ந.க.எண் 640/2020/இ2.**

**நகர்மன்றத் தீர்மான எண்:** 693 அனுமதிக்கப்பட்டது.

5. இந்நகராட்சி பேருந்து நிலையத்திற்கு எதிரே அமைந்துள்ள நகராட்சிக்குச் சொந்தான கட்டிடத்தை (உதவி இயக்குநர் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை அலுவலகமாக செயல்பட்ட கட்டிடம்) ஏலம்/ஒப்பந்தப்புள்ளி மூலம் மூன்றாண்டு குத்தகைக்க விட 15.12.2021 அன்று ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஏலம் கோர ஒருவரும் முன்வரவில்லை. அன்றைய தினத்தில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எண்** | **ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளவர் பெயர் மற்றும் முகவரி** | **ஒப்பந்தப்புள்ளி மாத வாடகை தொகை** |
|---|---|---|
| 1. | Cஅனிதா, D/O.லெட்சுமணன்,<br>மாணிக்கவாசகர் தெரு,<br>சிவகங்கை. | ரூ.15,000/- |
| 2. | K.முருகேசன், S/O.கருப்பையா,<br>தொண்டிரோடு 7வது குறுக்குத் தேரு,<br>சிவகங்கை. | ரூ.14,000/- |

அலுவலகக்குறிப்பு:

1. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 1ல் குறிப்பிட்டுள்ள Cஅனிதா என்பவரின் ஒப்பந்தப்புள்ளி தொகை அதிகமாக உள்ளதால் இவற்றை அனுமதிக்கலாம்.
2. நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கூட்ட அறிவுரையின் படி, நகராட்சிக்கு கூடுதல் வரவினத்தை கருத்தில் கொண்டு தனி அலுவலர் முன் அனுமதி அளித்துள்ளதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

   (ந.க.எண்..2334/2021/அ1)

**நகர்மன்றத் தீர்மான எண்:** 694 அனுமதிக்கப்பட்டது.

6. சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட தர்மர் கோவில் தெருவில் சின்டெக்ஸ் டேங் மாற்றுதல் பணிக்கு (மதிப்பீட்டு ரூ.0.80 இலட்சம்) 07.10.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்ற விபரத்தை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ,எண்** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **சதவீதம்** |
|---|---|---|
| 1 | திருமதி. K.மீனாம்பாள் சிவகங்கை | 0.09 % மதிப்பீட்டு விலை விகித்தை விட குறைவு |
| 2 | திரு. சோனைமுத்து ஒப்பந்த்தார்ர் சிவகங்கை | 4.57% மதிப்பீட்டு விலை விகித்தை விட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு:**

1. மேற்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகித்தை விட 0,09% குறைவாக வழங்கிய ஒப்பந்ததாரர் திருமதி. K.மீனாம்ப்பாள் என்பவர் வழங்கிய ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
2. மேற்படி பணியானது குடிநீர் பணியென்பதால் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவரின் முன் அனுமதி பெற்று மேற்படி ஒப்பந்ததாரர்க்கு வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்

**நகர்மன்றத் தீர்மான எண்:** 695 அனுமதிக்கப்பட்டது.

7. சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்:21, மதுரைரோடு முதல் குறுக்குத் தெருவில் புதியதாக ஆழ்துறை கிண அமைக்கும் பணிக்க 17.11.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு இரு ஒப்பந்தப்புள்ளிகள் ம்ன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | திரு.M.நாட்டரசன், ஒப்பந்ததாரர், சிவகங்கை | 0.05% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு. |
| 2. | திரு.N.மாரியப்பன், ஒப்பந்ததாரர், சிவகங்கை | 10% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம். |

**அலுவலக்குறிப்பு:**

1. மேற்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.05% குறைவாக வழங்கிய ஒப்பந்தகாரர் திரு.M.நாட்டரசன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
2. மேற்படி பணியானது குடிநீர் சம்மந்தப்பட்ட பணியென்பதால், பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்படி ஒப்பந்ததாரருக்கு வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண்:** 696 அனுமதிக்கப்பட்டது.

8. சிவகங்கை நகராட்சி கட்டுப்பாட்டில் உள்ள 48 காலனி, நகராட்சி நடுநிலைப்பள்ளியில் தற்போது நகராட்சி கல்வி நிதியில் கூடுதலாக நான்கு வகுப்பளை கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளது. இவ்வகுப்பறையில் மாணவர்கள் அமர்வதற்கு 25 எண்ணிக்கை Desk மற்றும் 25 எண்ணிக்கை Bench ஆகியவைகள் வாங்கி தருமாறு இப்பள்ளியின் தலைமை ஆசியரியர் தனது கடிதத்தில் கேட்டுக்கொள்ளார். மேலும் இப்பள்ளியில் கரும்பலகையை பயன்படுத்தி கல்வி கற்பிக்கப்பட்டு வருவதால் அதிகமான தூசி வருகிறது எனவும், இதனால் மாணவர்களின் உடல்நலம் பாதிக்கப்படுவதாக தெரிவித்துள்ளார். எனவே இதற்கு மாற்று ஏற்பாடாக செராமிக் முலாம் பூசப்பட்ட "Green Writing Borad" மற்றும் "Low Level Board" ஏற்படுத்தி தருமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

எனவே இப்பள்ளிக்கு "Desk and Bench", "Green Writing Board Low Level Board" வசதி ஏற்படுத்த தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.9.80 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணியானது மாணவர்களின் கல்வி நலன் கருதி மேற்கொள்ளப்படும் பணி என்பதால் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண்:** 697 அனுமதிக்கப்பட்டது.

9. சிவகங்கை நகராட்சி கட்டுப்பாட்டில் உள்ள 48 காலணி நகராட்சி நடுநிலைப்பள்ளில் கூடுதலாக கட்டப்பட்டுள்ள 4 வகுப்பறைகளுக்கு மாணவர்கள் அமர்வதற்கு "Desk and Bench" பாடம் கற்பிப்பதற்கு "Green Writing Board Low Level Board" வசதி ஏற்படுத்தும் பணிக்கு 16.11.2021 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கீழ்கண்டவாறு இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | திருவாளர்கள் SUXUS Engineering மதுரை. | 2.68% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 2. | திருவாளர்கள் 3A Associates மதுரை. | 0.09% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |

**அலுவலக்குறிப்பு** :

1. மேற்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டு விலை விகித்த்தை விட 0.09% குறைவாக வழங்கிய M/S, 3A Associates நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
2. மேற்படி பணியானது மாணவர்களின் கல்வி நலன் சம்மந்தப்பட்ட பணி என்பதால் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று திருவாளர்கள் 3A Associates நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்கியது ஏற்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண்**: 698 அனுமதிக்கப்பட்டது.

10. சிவகங்கை நகராட்சி கட்டுப்பாட்டில் உள்ள நகராட்சி கோட்டை மூலை ஆரம்ப பள்ளி உள்ள இப்பள்ளியில் சுமார் 30. மாணவ, மாணவிகள் பயின்று வருகிறார்கள், மேலும் இங்கு கரும்பலகையை பயன்படுத்தி மாணவர்களுக்கு கல்வி கற்பிக்கப்பட்டு வருகிறது கரும்பலகையை பயன்படுத்துவதால் அதிகமான தூசி வருகிறது. இதனால் மாணவர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள் என பள்ளியின் தலைமை ஆசியரின் கடிதத்தில் தெரிவித்துள்ளார் இதற்கு மாற்று ஏற்பாடாக செராமிக் மூலம் பூசப்பட்ட பச்சை பலகை பொருத்தினை தருமாறு கோரியுள்ளார் எனவே மாணவர்களின் உடல் நலன் கருதியும் மாணவர்களின் சேர்க்கையை அதிகப்படுத்துவதற்கும் மற்றும் பள்ளின் தரத்தினை உய்ர்த்துவதற்கு இப்பள்ளியில் " Kids Park , Green Writing Board , Low Level Board " வசதி ஏற்படுத்த தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ6.20 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு** :

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. மேற்படி பணியானது மாணவர்களின் கல்வி நலன் கருதி மேற்கொள்ளப்படும் பணியென்பதால் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர் நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண்**: 699 அனுமதிக்கப்பட்டது.

11. சிவகங்கை நகராட்சி கட்டுப்பாட்டில் உள்ள நகராட்சி கோட்டை மூலை ஆரம்பள்ளியில் மாணவர்கள் அமர்வதற்கு "Desk and Bench" பாடம் கற்பிப்பதற்கு "Green Writing Board , Low Level Board மற்றும் Kids Park" வசதி ஏற்படுத்தும் பணிக்கு 16.11.2021 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கீழ்கண்டவாறு இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | திருவாளர்கள் SUXUS Engineering மதுரை. | 0.01% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 2. | திருவாளர்கள் 3A Associates மதுரை. | 0/43% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |

**அலுவலக்குறிப்பு** :

1. மேற்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டு விலை விகித்த்தை விட 0.43% குறைவாக வழங்கிய M/S, 3A Associates நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
2. மேற்படி பணியானது மாணவர்களின் கல்வி நலன் சம்மந்தப்பட்ட பணி என்பதால் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று திருவாளர்கள் 3A Associates மதுரை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்கியது ஏற்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண்**: 700 அனுமதிக்கப்பட்டது.

12. சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்..03ல் உள்ள புதூர் சாலை 6வது குறுக்குத் தெருவில் தார்சாலையானது சேதமடைந்துள்ளதால் அப்பகுதிகயில் வாழும் பொதுமக்கள் மிகவும் சிரமத்திற்குள்ளாகின்றனர். மேலும் மழைக்காலங்களில் மழைநீர் தேங்கி பொதுமக்கள் நடந்து செல்ல முடியாத நிலை உள்ளது. மேற்காணும் சாலை நேராய்வு செய்யப்பட்டதில் நகராட்சியின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பாதாள சாக்கடைத் திட்டம் உள் இணைப்புகள் குடிநீர் இணைப்புகள் மற்றும் மழை வெள்ளத்தாலும் சாலை சேதமடைந்துள்ளது.

தற்பொழுது மழைக்காலமாக இருப்பதால் பொதுமக்கள் நடந்து செல்வதற்கும், வாகனங்கள் செல்லவும் மிகவும் இடையூறாகவும் உள்ளது. மழைக்காலங்களில் மழைநிர் தேங்கி பொதுமக்களின் பொதுசுகாதாரம் பாதிக்கும் சூழ்நிலை உள்ளது. எனவே பொதுமக்களின் நலன் கருதி சாலையை பேவர் பிளாக் சாலை அமைக்க ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.9.00 இலவட்சத்திற்கு நகர் மன்றத்தின் பார்வைக்கும் நிர்வாக அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு** :

1. மேற்படி பணிக்கான மதிப்பீட்டிமை நகராட்சி வருவாய் நிதி 2021-22ன் கீழ் மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணியானது பொதுமக்களின் அத்தியாவசிய பணி என்பதால் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண்**: 701 அனுமதிக்கப்பட்டது.

13. சிவகங்கை நராட்சிக்குட்பட்ட வார்டு எண் 03 புதூர் சாலை 6வது குறுக்குத் தெருவில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணிக்கு 03.09.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ள விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | திருமதி, P.அனுராதா ஒப்பந்தாரர் சிவகங்கை. | 0.09% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| 2. | திரு. S.பிச்சை ஒப்பந்தாரர் சிவகங்கை | 0.48% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**அலுவலக்குறிப்பு :**

1. மேற்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகித்த்தை விட 0.09% குறைவாக வழங்கிய ஒப்பந்த்தாரர் திருமதி, P.அனுராதா என்பவர் வழங்கிய ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
2. தற்போது பருவமழை தொடர்ந்து பெய்து வருவதால் மேற்படி சாலையில் மழைநீர் தேங்கி போக்குவரத்திற்க இடையூறாக உள்ளது. அதனால் மேற்படி பணியினை உடனடியாக செய்து முடிக்க வேண்டியுள்ளது. எனவே பணியின் அவசர அவசியம்

**நகர்மன்றத் தீர்மான எண்:** 702 அனுமதிக்கப்பட்டது.

14. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மழைநீர் அகற்ற தேவையான 10 HP MOTOR Pump (Kirloskar)2, HP MOTOR Pump (Honda)3. மற்றும் கொசு புழுக்களை கண்டறிய தேவையான Torch Light 100. பொது சுகாதாரதா பணியின் அவசர அவசியம் கருதி உள்ளூர் நிறுவனங்களிடம் இருந்து குறுகிய கால விலைப்புள்ளி பெற அறிவிப்பு செய்யவும், மேற்கண்ட செலவினத்திற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.800000/- மன்றத்தின் அனுமதி கேட்கப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு :**

1. பொதுசுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி அனுமதி வழங்கலாம்.
2. செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(ந.க.எண்..2503/எச்1)

**நகர்மன்றத் தீர்மான எண்:** 703 அனுமதிக்கப்பட்டது.

15. நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் 2021க்குரிய வாக்குச்சாவடி மையங்களில் உள்ள அடிப்படை வசதிகள் குறித்த புகைப்படம் எடுத்து ஆல்பம் தயாரித்து கொடுப்பதற்கு 06.12.2021 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட மூன்று நிறுவனங்கள் விலைப்புள்ளிகள் அளித்துள்ளன.

| வரிசை எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை விபரம் | |
|---|---|---|---|
| | | மையம் ஒன்றுக்கு | மொத்த மையங்களுக்கு புகைப்படம் எடுக்க தொகை |
| 1. | செல்வி டிஜிட்டல் ஸ்டுடியோ & வீடியோ ராமர் அர்சுணர் காம்பளக்ஸ், இளையான்குடி ரோடு, சிவகங்கை. | 500/- | 3500/- |
| 2. | முருகன் ஸ்டுடியோ, காந்திவீதி, சிவகங்கை. | 600/- | 4000/- |
| 3. | சக்தி கிரியேசன்ஸ், சிவகங்கை. | 650/- | 4500/- |

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

1. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள செல்வி டிஜிட்டல் ஸ்டுடியோ & வீடியோ என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை அங்கீகரிக்கலாம்.
2. தேர்தல் அவசரப் பணியை கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பணியை செய்தமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்..2393/2021/சி1)**

**நகர்மன்றத் தீர்மான எண்**: 704 அனுமதிக்கப்பட்டது.

16. இவ்வலுவலக செயல்முறை உத்தரவு கடித.ந.க.எண் இ1/3136/2011 நாள் 28.09.2011ன் உத்தரவில் திருமதி தி.செண்பகவள்ளி சிவகங்கை என்பவரது பெயரிலுள்ள ஒப்பந்தத்தை 28.09.2011 முதல் ரத்து செய்து உத்தரவு வழங்கப்பட்டுள்ளதால் மேற்காணும் நபரின் பெயரிலுள்ள தொழில்வரி வரிவிதப்பு எண் 267035ஐ ரத்து செய்து தரக்கோரி திருமதிதி,செண்பகவள்ளி சிவகங்கை என்பவரிமிருந்து மனு வரப்பெற்றுள்ளது எனவே மேற்காணும் நபரின் பெயரிலுள்ள தொழில் வரி விதிப்பு எண் 267035க்குரிய (2013-2014 முதலாம் அரையாண்டு முதல் 2019- 2020 இரண்டாம் அரையாண்டு வரை) நிலுவைத் தொகை ரூ 16250/ஐ கணினியில் இருந்து ரச்து செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலகக்குறிப்பு** மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண் 2673/2021/இ1)

**நகர்மன்றத் தீர்மான எண்: 705** அனுமதிக்கப்பட்டது.

17. சிவகங்கை நகராட்சி தெருவிளக்கு பராமரிப்பு பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் தெரு விளக்குகளுக்கு தேவையான மின் உபகரணங்கள் தற்போது இருப்பில் உள்ளது இன்னும் ஒரு வார காலத்திற்கு போதுமானதாக உள்ளது எனவே மேலும் மூன் மாதங்களுக்கு

"மதுரை மாவட்ட பாண்டியன் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை நிறுவனத்திடம் " விலைப்புள்ளிகள் கோரியதில் தெரிவித்துள்ள விலை விகிதத்தின் படி செலவு செய்த தொகை ரூ.4,78,450/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** மன்றம் அனுமதிக்கலாம்

**நகர்மன்றத் தீர்மான எண்: 706** அனுமதிக்கப்பட்டது.

18. சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் 2021-2022ன் கீழ் ரூ.118,50,000/-மதிப்பீட்டில் (சிப்பம் 1) தார்சாலைகள் மற்றும் பேவர் பிளாக் சாலைகள் அமைக்கும் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்மறை ஆணை எண்..24886/2021/இ1. நாள்..19.11.2021 அன்று நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. மேலும் தலைமை பொறியாளர் நகராட்சி நிர்வாக இயக்குநரகம் சென்னை அவர்களின் செயல்மறை ஆணை எண்..28620/2021/DO1, நாள்..20.11.2021 அன்று தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தின் கீழ் ரூ.118.50 இலட்சத்திற்கான சிப்பம் எண்-I சாலைப்பணிக்கு 09.12.2021 அன்று முதல் முறையாக மின்ன்னு வாயிலாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் நேரடியாக மட்டும் 2 ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு கலந்தாய்வு குழு மூலும் 13.12.2021 தகுதிகாண் ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலிக்கப்பட்டது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கும் தொழில்நுட்ப தகுதிகள் இருந்ததால் 14.12.2021 அன்று விலைவிகித ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு, ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு தனி அலுவலரின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

Name of Work: Providing cement concrete Paver Block Road at Ward No:01 in CB Colony 1st Street (112001S015), CB Colony 2nd street (112001S016), CB Colony 3rd street (112001S017), CB Colony 4th street (112001S018), Thirupathur road cross stteet (112001S013), Thirupathur road cross street (112001S12), Thondi Road 5th Cross Street (112004R181), and Providing BT surface at Ward No:04 in Society Layout 3rd Street (112004R078), Krishna Layout Main (112004R083), Society Layout 1st Cross Street (112004R075), Ward No:07 in Poundu Street (112007R130), Ward No:11 in Majeeth Road 6th Cross street (112011R173), Ward

No:12 in Thondi Road 6th Cross street (112012R187), Thondi Road street (112012R188), Ward No:20 Bharathi Nagar 4th cross street (112020R310) - Package -I

| | | |
|---|---|---|
| 1. | திருமதி.M.லெட்சுமி,<br>ஒப்பந்ததாரர்,<br>சிவகங்கை | மதிப்பீட்டினைக்காட்டிலும் 6.56% அதிகம் |
| 2. | திரு.V.கண்ணன்,<br>ஒப்பந்ததாரர்,<br>சிவகங்கை | மதிப்பீட்டினைக்காட்டிலும் 4.92% அதிகம் |

**அலுவலக்குறிப்பு:**

1. மேற்கண்ட பணி திட்டப்பணியாக இருப்பதாலும், பணியினை விரைவாக உரியகாலத்தில் முடிக்கும் பொருட்டும் வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைக்காட்டிலும் 4.87% அதிகம் அளித்துள்ள திரு.V.கண்ணன் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம். அவசர அவசியம் கருதியும், காலதாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்படி ஒப்பந்ததாரருக்கு Letter Of Acceptance கடிதம் வாயிலாக 1% தொகையினை (4.92% மதிப்பீட்டைக்காட்டிலும் அதிகம் என்ற விலை விகிதத்தில்) செலுத்தக் கோரி நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. மேற்கண்ட பணியானது திட்டப்பணி என்பதாலும் பணியினை உரிய காலத்தில் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்க கொண்டு வரவேண்டி இருப்பதாலும், தமிழ்நாடு நகராட்சி பொறியியல் நடைமுறை தொகுதி நூல் பத்தி எண்:2.7.2-ன்படி நகர்மன்றத்திற்கு அதிகார வரம்பிற்குட்பட்டு வருவதால் அவசர அவசியம் கருதி மதிப்பீட்டைக்காட்டிலும் 4.92% அதிகம் அளித்துள்ள திரு.V.கண்ணன் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம், கூடுதல் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண்: 707** அனுமதிக்கப்பட்டது.

18. சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் 2021-2022ன் கீழ் ரூ.106,50,00/- மதிப்பீட்டில் (சிப்பம் 2) தார்சாலைகள் மற்றும் பேவர் பிளாக் சாலைகள் அமைக்கும் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண் 24886/2021/இ1 நாள் 19.11.2021 அன்று நிர்வாக அனுமதி வழுங்கப்பட்டது மேலும் தலைமை பொறியாளர் நகராட்சி நிர்வாக இயக்குநரகம் சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண் 28620/2021/DO1 நாள் 20.11.2021 அன்று தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது மேற்படி திட்டத்தின் கீழ் ரூ.106.50 இலட்சத்திற்கான சிப்பம் எண் II சாலைப்பணிக்கு 09.12.2021 அன்று முதல் முறையாக மின்னனு வாயிலாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டத்தில் நேரடியாக மட்டும் 2 ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன,.

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்ள்ளிகளுக்கு கலந்தாய்வு குழு மூலம் 13.12.2021 அன்று தகுதி ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலிக்கப்பட்டது வரபெற்ற இரண்டு ஒப்பந்நதப்புள்ளிக்ளுக்கும் தொழில்நுட்ப தகுதிகள் இருந்தால் 14.12.2021

Name of work:Providing BT Surface at Ward No:18 in Velayuthasamy koil street (112018R259), Ward No:19 in Meenakshi Nagar Extension (112019R280), Meenakshi Nagar Extension (112018R281), Meenakshi Nagar Extension (112019R283), Ward No:26 College Road 3rd cross street (11226R366),Ward No:27 Ilayangudi Road East 18th Cross street (112027R411), Ilayangudi Road East 11th Cross street (112027R405) and Providing cement concrete Paver Block Road Ward No:27 Ilayangudi Road West 4th Cross Street (11220R380), Ilayangudi Road West 4th Cross Street (11227R381), Ilayangudi Road East 9th cross street (112027S167), Ilayangudi Road East 9th Cross Street (112027R399)-Package II

| | | |
|---|---|---|
| 1. | திருமதி.P.அனுராதா,<br>ஒப்பந்ததாரர், சிவகங்கை | மதிப்பீட்டினைக்காட்டிலும் 4.87% அதிகம் |
| 2. | திரு.G.ரவிச்சந்திரன்,<br>ஒப்பந்ததாரர், சிவகங்கை | மதிப்பீட்டினைக்காட்டிலும் 7.13% அதிகம் |

**அலுவலக்குறிப்பு:**

1. மேற்கண்ட பணி திட்டப்பணியாக இருப்பதாலும், பணியினை விரைவாக உரியகாலத்தில் முடிக்கும் பொருட்டும் வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைக்காட்டிலும் 4.87% அதிகம் அளித்துள்ள திருமதி.P.அனுராதா, ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம். அவசர அவசியம் கருதியும், காலதாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்படி ஒப்பந்ததாரருக்கு Letter Of Acceptance கடிதம் வாயிலாக 1% தொகையினை (4.87% மதிப்பீட்டைக்காட்டிலும் அதிகம் என்ற விலை விகிதத்தில்) செலுத்தக் கோரி நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. மேற்கண்ட பணியானது திட்டப்பணி என்பதாலும் பணியினை உரிய காலத்தில் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்க கொண்டு வரவேண்டி இருப்பதாலும், தமிழ்நாடு நகராட்சி பொறியியல் நடைமுறை தொகுதி நூல் பத்தி எண்:2.7.2-ன்படி நகர்மன்றத்திற்கு அதிகார வரம்பிற்குட்பட்டு வருவதால் அவசர அவசியம் கருதி மதிப்பீட்டைக்காட்டிலும் 4.87% அதிகம் அளித்துள்ள திருமதி.Pஅனுராதா ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம், கூடுதல் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண்:** 708 அனுமதிக்கப்பட்டது.

**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்,**

**சிவகங்கை நகராட்சி.**